**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2026ம் ஆண்டு ஜீன் மாதம் 17–ம் தேதி பிரதிவாதி தரப்பு சாட்சி பி.வா.சா.1–ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படிதிரு.G.அசோக்பிரசாத் B.A.B.L., M.S.E.N., ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

(3ம்வாதி ஆஜர். 1,2 வாதிகள் ஆஜர் இல்லை. 1 முதல் 8 பிரதிவாதிகள் ஆஜர் இல்லை. வாதி மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர். 4 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர் இல்லை.)

அ.வ.எண்.756/2018

பி.வா.சா.1. தர்மலிங்கம் த/பெ மாரப்பகவுண்டர்

**வாதி தரப்பு குறுக்குவிசாரணை :–**

1.பி.வா.சா.ஆ4 ஆவணமான உயிலில் உள்ள சாட்சியான தங்கமுத்துகவுண்டரை பார்த்துள்ளேன். மற்றொரு சாட்சியான பழனியப்பகவுண்டரை பார்த்துள்ளேன். மேற்கண்ட சாட்சிகள் இருவருக்கும் அவருடைய வாரிசுகள் இன்றும் உள்ளார்கள். மேற்படி குடும்பத்தாரில் உள்ள வாரிசுகளை அழைத்து உயிலில் உள்ள சாட்சி கையொப்பங்களை காட்டினால் போலி என்று தெரிந்துவிடும் என்பதால் அவர்களை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

2. பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் தங்கமுத்துகவுண்டர் ஈச்சம்பள்ளி கிராமம் என்ற விலாசம் உள்ளது மேலும் பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் உள்ள தங்கமுத்துகவுண்டர் விலாசம் தவறாக உள்ளது என்பதால் பி.வா.சா.ஆ.4 என்பது தங்கமுத்துகவுண்டருக்கு பெயரில் கொடுத்த ஆவணமல்ல என்று சொன்னால் சரியல்ல. மேற்படி உயிலில் புஞ்சைகிளம்பாடி கிராமத்தை சேர்ந்த பழனியப்பகவுண்டர் என்று உள்ளது ஆனால் பி.வா.சா.ஆ.7 ஆவணத்தில் பழனிசாமி என்று உள்ளது புஞ்சைகிளம்பாடி என்ற கிராமம் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. மேலும் பி.வா.சா.ஆ.7 ஆவணம் பி.வா.சா.ஆ.4 ஆவணத்துடன் ஒத்துபோகவில்லை என்பதால் பழனியப்பகவுண்டரின் இறப்பு சான்றிதழ் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை:– இல்லை.